## சாஸ்தா மூல மந்திரம்

ஓம் ஹரிஹர புத்ராய புத்ரலாபாய
மஹா சாஸ்த்ரே சத்ரு நாசனாய
மதகஜ வாகனாய பிரத்யட்சய சூலாயுதாய
வரவரத சர்வ ஜனமே வசமானய ஸ்வாஹா

## சாஸ்தா காயத்ரி

ஓம் பூத நாதாய வித்மஹே
பவ நந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தா பிரசோதயாத்

## மங்களம்

பஞ்சாதிரிஸ்வர மங்களம்
ஹரிஹரப்ரோமா க்ருதே மங்களம்
பிஞ்சாலங் க்ருத மங்களம்
ப்ரண மதாம் சிந்தா மணே மங்களம்
பஞ்சாஸ்ய த்வஜ மங்களம்
த்ரு ஜகதாம் மாத்ய ப்ரயோ மங்களம்
பஞ்சாஸ்ரோ பம மங்களம்
ச்ருதி சிரோலங்கார மங்களம்

Rs 5/-

© 461415

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம் (Regd.)
1G லாசன்ஸ் ரோடு, திருச்சி 620 001.



தூய மனத்துடன் உனை நான் துதிக்க
என்றுமே அருள்வாய் ஐயப்ப தேவா

# ஸ்ரீ ஐயப்ப நாமாவளிகள்

**நல்லதை நினைப்போம்**
**நல்லதைப் பேசுவோம்**
**நல்லதைச் செய்வோம்**
**நல்லவை தானாக வரும்**

# 1. சரணகோஷங்கள்

சுவாமியே சரணம் ஐயப்பா
அரிஹர சுதனே சரணம் ஐயப்பா
அச்சன் கோயில் அரசே சரணம் ஐயப்பா
அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா
அமரர் துயர் தீர்த்தவனே சரணம் ஐயப்பா

அப்பாச்சிமேடே சரணம் ஐயப்பா
அபயப்பிரதாபனே சரணம் ஐயப்பா
அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
அழுதா நதித்தீர்த்தமே சரணம் ஐயப்பா
அனாத ரட்சகனே சரணம் ஐயப்பா 10

ஆபத்பாந்தவனே சரணம் ஐயப்பா
ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
இராஜசேகரன் மகனே சரணம் ஐயப்பா
இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா

உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
உரக்குழித் தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஊர்க்காவல் கொண்டவனே சரணம் ஐயப்பா
எரிமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா 20

ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஏகஜோதியானவனே சரணம் ஐயப்பா

ஏகாந்த மூர்த்தியே — சரணம் ஐயப்பா
ஏற்றமலையில் இருப்பவனே — சரணம் ஐயப்பா
ஐந்துமலைக்கு அதிபதியே — சரணம் ஐயப்பா

ஐயப்ப தெய்வமே — சரணம் ஐயப்பா
ஐம்புலன்களையும் அடக்கியாள்பவனே — சரணம் ஐயப்பா
ஒன்றே மெய்யென நின்றவனே — சரணம் ஐயப்பா
ஓரிடத்தில் நிலையானவனே — சரணம் ஐயப்பா
ஔதாரிய வீரனே — சரணம் ஐயப்பா 30

கன்னிமூலை கணபதி பகவானே — சரணம் ஐயப்பா
கற்பூர ஜோதியே — சரணம் ஐயப்பா
கலியுக வரதனே — சரணம் ஐயப்பா
கண்கண்ட தெய்வமே — சரணம் ஐயப்பா
கரிமலை வாசனே — சரணம் ஐயப்பா

கரிமலை பகவதியே — சரணம் ஐயப்பா
கல்லிடும் குன்றமே — சரணம் ஐயப்பா
கானக வாசனே — சரணம் ஐயப்பா
காமனை வென்றவனே — சரணம் ஐயப்பா
காருண்ய சீலனே — சரணம் ஐயப்பா 40

காந்தமலை ஜோதியே — சரணம் ஐயப்பா
காளைகட்டி ஆஸ்ரமமே — சரணம் ஐயப்பா
குளத்துப்புழை பாலகனே — சரணம் ஐயப்பா
குழந்தை வடிவானவனே — சரணம் ஐயப்பா
குருவுக்கும் குருவே — சரணம் ஐயப்பா

குருதட்சணை கொடுத்தவனே — சரணம் ஐயப்பா



கொச்சுக் கடுத்த சுவாமியே — சரணம் ஐயப்பா
ஞானச்சுடரே — சரணம் ஐயப்பா
சமஸ்தாபராத ரட்சகனே — சரணம் ஐயப்பா
சத்ய ஸ்வரூபனே — சரணம் ஐயப்பா 50

சர்வமங்கள நாயகனே — சரணம் ஐயப்பா
சரண கோஷப்பிரியனே — சரணம் ஐயப்பா
சர்வரோக நிவாரணனே — சரணம் ஐயப்பா
சபரி பீடமே — சரணம் ஐயப்பா
சபரிக்கு மோட்சம் அளித்தவனே — சரணம் ஐயப்பா

சற்குரு நாதனே — சரணம் ஐயப்பா
சபரிகிரி வாசனே — சரணம் ஐயப்பா
சாந்த ஸ்வரூபனே — சரணம் ஐயப்பா
சின்முத்திரை தாரியே — சரணம் ஐயப்பா
சேவிப்போர்க்கு ஆனந்த மூர்த்தியே — சரணம் ஐயப்பா 60

சோதிச்சுடரே — சரணம் ஐயப்பா
தவக்கோலம் கொண்டவனே — சரணம் ஐயப்பா
தாய்க்குப் புலிப்பால் கொணர்ந்தவனே — சரணம் ஐயப்பா
தாரகப்பிரம்மமே — சரணம் ஐயப்பா
திருச்சிராப்பள்ளி ஸ்ரீஐயப்ப தெய்வமே — சரணம் ஐயப்பா

துளசிமணி மார்பனே — சரணம் ஐயப்பா
தீனதயாளனே — சரணம் ஐயப்பா
நித்ய பிரம்மச்சாரியே — சரணம் ஐயப்பா
நீலிமலைவாசனே — சரணம் ஐயப்பா

நெய் அபிஷேகப் பிரியனே சரணம் ஐயப்பா 70

பம்பையின் பாலகனே சரணம் ஐயப்பா
பம்பையின் தீர்த்தமே சரணம் ஐயப்பா
பந்தள ராஜகுமாரனே சரணம் ஐயப்பா
பதினெட்டாம் படியோனே சரணம் ஐயப்பா
பானகப்பிரியனே சரணம் ஐயப்பா

பாயசன்னப் பிரியனே சரணம் ஐயப்பா
பாண்டியகுல தீபமே சரணம் ஐயப்பா
பிரம்மச்சரிய விரதப்பிரியனே சரணம் ஐயப்பா
பூதநாத ஸ்வாமியே சரணம் ஐயப்பா
பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா 80

மணிகண்ட மார்பனே சரணம் ஐயப்பா
மஹிஷி மர்த்தனனே சரணம் ஐயப்பா
மகரதீப ஜோதியே சரணம் ஐயப்பா
மலையாளம் குடி வாழ்பவனே சரணம் ஐயப்பா
மலைக்கோயில் கொண்டவனே சரணம் ஐயப்பா

மாளிகைபுரத்து மஞ்சமாதாவே சரணம் ஐயப்பா
மோகினி சுதனே சரணம் ஐயப்பா
வன்புலியில் வந்தவனே சரணம் ஐயப்பா
வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
வேட்டைக்கொரு மகனே சரணம் ஐயப்பா 90

வேத கோஷப்பிரியனே சரணம் ஐயப்பா
வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா



ஸ்வாமியின் சந்நிதானமே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் திருவாபரணமே சரணம் ஐயப்பா

ஸ்வாமியின் பள்ளிக்கட்டே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் மணிமண்டபமே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் பஸ்மக்குளமே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் கற்பூர ஆழியே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் பதினெட்டாம் படிகளே சரணம் ஐயப்பா 100

ஸ்வாமியின் பூதகணங்களே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் பழமக்காரே சரணம் ஐயப்பா
ஸ்வாமியின் கன்னிக்காரே சரணம் ஐயப்பா
வழித்துணை வரவேண்டும் சுவாமியே சரணம் ஐயப்பா
பாத பலம் தரவேண்டும் சுவாமியே! சரணம் ஐயப்பா

தேகபலம் தரவேண்டும் சுவாமியே சரணம் ஐயப்பா
பாத தரிசனம் தரவேண்டும் சுவாமியே சரணம் ஐயப்பா
ஜோதி தரிசனம் தரவேண்டும் சுவாமியே சரணம் ஐயப்பா 108

அறிந்தோ அறியாமலோ நாங்கள் எந்தவிதமான தவறும் செய்யாமல் விரத நெறியினை முறையாகக் கடைப் பிடிக்க அருள் புரிய வேண்டும் ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படியின்மேல் வாழும் சத்திய சந்தன், சபரிகிரீஸ்வரன், அரிஹர சுதன், ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா!

★★★★★

## 2. ஸ்ரீ ஐயப்பன் கவசம்

### காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்தரூபனை
இருமூர்த்தி மைந்தனை அறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசம் இதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்க தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே

### நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2



பூத நாயகா வருக வருக
புஷ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணி கண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள்தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியில் உள்ளோர் அடிபணிந்தேத்துவர்

சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சற்குருநாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 12

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 13



முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா என் தொடைதனைக் காக்க

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூரஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விரல்களைக் காக்க

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்கிரக நாதன் நடுப்பகல் காக்க

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தன்னை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய் 20

பில்லி, சூன்யம், பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரம் எனக்கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் 21

வாதம், பித்தம், சிலேச்சுமத்துடனே
வாந்தியும், பேதியும், வலிப்பும், சுளுக்கும்
எவ்வித நோயும் எனை அணுகாமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா 22

கல்வியும், செல்வமும், கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா 23

காமம், குரோதம், லோபம், மோகம்
மதமாச்சர்யம் என்னும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகவிடாமல்
ஐயப்ப தேவா வரமெனக்கருள்வாய் 24

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் இல்லாமல்
வேத நெறியினை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரம் எனக்கருள்வாய் 25



மூப்பும், பிணியும், வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன்புடனே உன் திருநாமம்
அனுதினம் சொல்ல அருள்தருவாயே. 26

## நமஸ்காரம்

*அரிஹர புத்ரா அன்பா* நமோ நமோ
*சபரிகிரீசா சாஸ்தா* நமோ நமோ
*பதினென் படிவாழ் பரமா* நமோ நமோ
*ஐங்கரன் சோதரா ஐயப்பா* நமோ நமோ 27

*பொன்னம்பலத் துறை புண்ணியா* நமோ நமோ
*புலிப்பால் ஈன்ற புண்ணியா* நமோ நமோ
*கரிகாயுத முடை சுந்தரா* நமோ நமோ
*மகிஷிமர்த்தனா மணிகண்டா* நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீஸா
சரணம் சரணம் சத்யஸ்வரூபா
சரணம் சரணம் சர்வதயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்! 29

ஸ்வாமியே சரணம்

**ஸ்வாமியே சரணம் ஐயப்பா!**

❖ ❖❖

# 3. தர்ம சாஸ்தா அஷ்டோத்திரம்

ஓம் மஹா சாஸ்த்ரே நம:
" மஹா தேவாய நம:
" மஹா தேவஸுதாய நம:
" அவ்யயாய நம:
" லோக கர்த்ரே நம: 5

" லோகபர்த்ரே நம:
" லோகஹர்த்ரே நம:
" பராத் பராய நம:
" த்ரிலோக ரக்ஷகாய நம:
" தன்வினே நம: 10

" தபஸ்வினே நம:
" பூதஸைனி காய நம:
" மந்த்ரவேதினே நம:
" மஹாவேதினே நம:
" மாருதாய நம: 15

" ஜகதீச்வராய நம:
" லோகாத்யக்ஷாய நம:
" அக்ரண்யே நம:
" ஸ்ரீமதே நம:
" அப்ரமேயபராக்ரமாய நம: 20

" ஸிம்ஹாரூடாய நம:
" கஜாரூடாய நம:



ஓம் ஹயாரூடாய நம:
" மஹேச்வராய நம:
" நானாச்ஸ்த்ரதராய நம: 25

" அனர்காய நம:
" நானாவித்யாவிசாரதாய நம:
" நானாரூபதராய நம:
" வீராய நம:
" நானாப்ராணி நிஷேவதாய நம: 30

" பூதேசாய நம:
" பூதிதாயே நம:
" ப்ருத்யாய நம:
" புஜங்க பரணோத்தமாய நம:
" இக்ஷுதன்வினே நம: 35

" புஷ்ப பாணாய நம:
" மஹா ரூபாய நம:
" மகாப்ரபவே நம:
" மாயாதேவி ஸுதாய நம:
" மான்யாய நம: 40

" மஹாநீதாய நம:
" மஹாகுணாய நம:
" மஹாசைவாய நம:
" மஹாருத்ராய நம:
" வைஷ்ணவாய நம: 45

ஓம் விஷ்ணு பூஜகாய நம:
" விக்னேசாய நம:
" வீரபத்ரேசாய நம:
" பைரவாய நம:
" ஷண்முகத்ருவாய நம: 50

" மேரு ச்ருங்க ஸமாஸீனாய நம:
" முனி ஸங்க நிஷேவிதாய நம:
" தேவாய நம:
" பத்ராய நம:
" ஜகந்நாதாய நம: 55

" கணநாதாய நம:
" கணேச்வராய நம:
" மஹாயோகினே நம:
" மஹாமாயினே நம:
" மஹா ஞானினே நம: 60

" மஹாஸ்திராய நம:
" தேவசாஸ்த்ரே நம:
" பூதசாஸ்த்ரே நம:
" பீமஹாஸபராக்ரமாய நம:
" நாகஹாராய நம: 65

" நாகேசாய நம:
" வ்யோம கேசாய நம:
" ஸனாதனாய நம:



ஓம் ஸகுணாய நம:
" நிர்குணாய நம: 70

" நித்யாய நம:
" நித்ய திருப்தாய நம:
" நிராச்ரயாய நம:
" லோகாச்ரயாய நம:
" கணாதீசாய நம: 75

" சதுஷ் ஷஷ்டி கலாமயாய நம:
" ருக்யஜுஸ் ஸாமதர்வண ரூபினே நம:
" மல்லகாஸுர பஞ்ஜனாய நம:
" திருமூர்த்தியே நம:
" தைத்யமதனாய நம: 80

" ப்ரக்ருதயே நம:
" புருஷோத்தமாய நம:
" காலஞானினே நம:
" காமதாய நம:
" கமலேக்ஷணாய நம: 85

" கல்ப வ்ருக்ஷாய நம:
" மஹா வ்ருக்ஷாய நம:
" வித்யாய வ்ருக்ஷாய நம:
" விபூதிதாய நம:

ஓம் ஸம்ஸாரதாப விச்சேத்ரே நம: 90
" பசுலோக பயங்கராய நம:
" ரோகஹந்த்ரே நம:
" ப்ராணதாத்ரே நம:
" பரகர்வ விபஞ்ஜனாய நம:
" ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வக்ஞாய நம: 95
" நீதிமதே நம:
" பாப பஞ்ஜனாய நம:
" புஷ்களா பூர்ண ஸம்யுக்தாய நம:
" பரமாத்மனே நம:
" ஸதாம்கதயே நம: 100
" அனந்தாதித்ய ஸம்காசாய நம:
" ஸுப்ரமண்யானுஜாய நம:
" பலினே நம:
" பக்தானுகம்பினே நம:
" தேவேசாய நம: 105
" பகவதே நம:
" பக்தவத்ஸலாய நம:

ஓம் நானாவித பரிமளபத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி

✪ ✪ ✪



## 4. ஸ்ரீ தர்ம சாஸ்தா பஞ்சரத்ன மாலா

1. லோக வீரம் மஹாபூஜ்யம் ஸர்வரக்ஷாகரம்விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

2. விப்ரபூஜ்யம் விச்வவந்த்யம் விஷ்ணு சம்போப்ரியம் ஸுதம்
க்ஷிப்ரப்ரஸாத நிரதம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

3. மத்தமாதங்க கமனம் காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வவிக்ன ஹரம்தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

4. அஸ்மத் குலேச்வரம் தேவம் அஸ்மத் சத்ருவினாசனம்
அஸ்மதிஷ்ட ப்ரதாதாரம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

5. பாண்ட்யேச வம்சதிலகம் கேரளே கேளிவிக்ரஹம்
ஆர்த்த்ராணபரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

6. பஞ்சரத்னாக்ய மேதத்யோ, நித்யம் சுத்த படேன் நர
தஸ்ய ப்ரஸன்னோ பகவான் சாஸ்தா வசதிமானஸே

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா*

## ஸ்ரீ தர்மசாஸ்தா நமஸ்கார பஞ்சரத்னம்

1. அருணோதய ஸங்காசம் நீல குண்டல தாரிணம்
நீலாம்பர தரம் தேவம் வந்தேஹம் ப்ரும்ம நந்தனம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

2. சாப பாணம் வாமஹஸ்தே ரெளப்ய வேத்ரஞ்சதக்ஷிணே
வில்ஸத் குண்டல தரம் வந்தேஹம் விஷ்ணு நந்தனம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

3. வியாக்ராரூடம் ரக்தநேத்ரம் ஸ்வர்ணமாலா விபூஷணம்
வீரபட்டதரம் கோரம் வந்தேஹம் சம்பு நந்தனம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

4. கிங்கிண் யொட்யாண பூஷேஷம் பூர்ண சந்த்ர நிபானனம்
கிராதரூப சாஸ்தாரம் வந்தேஹம் பாண்ட்ய நந்தனம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

5. பூத வேதாள ஸம்ஸேவ்யம் காஞ்சனாத்ரி நிவாஸினம்
மணிகண்ட மிதிக்யாதம் வந்தேஹம் சக்தி நந்தனம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

6. யஸ்ய தந்வந்தரீ மாதா பிதாருத்ரோ பிஷக்தம:
தம் சாஸ்தார மஹம் வந்தே மஹாவைத்தியம் தயாநிதம்

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

7. பூதநாத ஸதாநந்தா ஸ்ர்வபூத தயாபரா
ரக்ஷரக்ஷ மஹாபாஹோ சாஸ்த்ரோ துப்யம் நமோ நம

*ஸ்ரீ ஸ்வாமியே சரணம் ஐயப்பா!*

★★★★★



## 5. ஹரிவராஸனம்

### ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்

*சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணமய்யப்பா*
*சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணமய்யப்பா*

*ஹரிவராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்*
*ஹரிததீஸ்வரம் ஸ்வாமி ஆராத்ய பாதுகம்*
*அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்ய நர்த்தனம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* (சரணம்) 1

*சரணகீர்த்தனம் ஸ்வாமி சக்தமானஸம்*
*பரண லோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்*
*அருண பாஸுரம் ஸ்வாமி பூத நாயகம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* (சரணம்) 2

*ப்ரணய ஸாத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்*
*ப்ரணத கல்பகம் ஸ்வாமி ஸுப்ரபாஞ்சிதம்*
*ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* (சரணம்) 3

*துரக வாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்*
*வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்*
*குருக்ருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* (சரணம்) 4

*த்ரிபுவனார்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்*
*த்ரிணயனப்ரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்*
*த்ரிதச பூஜிதம் ஸ்வாமி சிந்திதப்ரதம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* **(சரணம்) 5**

*பவபயாபஹம் ஸ்வாமி பாவுகாவகம்*
*புவனமோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்*
*தவள வாரணம் ஸ்வாமி திவ்யவாகனம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* **(சரணம்) 6**

*களம்ருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்*
*களப கோமளம் ஸ்வாமி காத்ர மோகனம்*
*களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்*
*ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* **(சரணம்) 7**

*ச்ரித ஜனப்ரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்*
*ச்ருதி விபூஷணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்*
*ச்ருதி மனோகரம் ஸ்வாமி கீதலாலசம்*
*ஹரி ஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே* **(சரணம்) 8**

*சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணமய்யப்பா*
*சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணமய்யப்பா.*

★★★★★



# 6. சில விரத முறை குறிப்புகள்

1. கார்த்திகை முதல்நாள் மாலை அணிவது மிகச் சிறந்தது. அன்று நாள், கிழமை, நேரம் பார்க்க வேண்டியது இல்லை.
2. 54 அல்லது 108 மணிகள் உள்ள துளசி மாலையை, பலமுறை சபரிமலைக்குச் சென்று பக்குவ நிலையடைந்து தன்னலம் கருதாமல் வழிநடத்திச் செல்லும் குருசுவாமியின் கையால் அணிவிக்கப் பெறுதல் வேண்டும். விரதத்தை 41 நாட்கள் கடைப்பிடித்தல் உத்தமம்.
3. விரத காலத்தில் கருப்பு, நீலம், காவி ஆகிய ஏதாவதொரு நிறத்தில் உடை உடுத்துதல் வேண்டும்.
4. தினமும் காலை மாலை இருவேளையும் குளிர்ந்த நீரில் நீராடி ஐயப்பன் திருவுருவப் படத்தின் முன் விளக்கேற்றி வைத்து சரணங்கள் சொல்லி வழிபட வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் கலந்து கூட்டு வழிபாடு செய்வது மிகச் சிறந்தது.
5. தீவிர பிரமச்சரிய விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.
6. புலால் உண்ணுவது, மதுபானம் அருந்துவது, புகை பிடிப்பது – இவைகள் அறவே கூடாது.
7. எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், லாகிரி வஸ்துக்கள் சேர்த்து கொள்ளுதல், கேளிக்கை, சூதாடுதல் – இவைகள் அறவே கூடாது.
8. விரத காலத்தில் மதியம் ஒருவேளை சாப்பாடும், காலை மாலை சிறிதளவு சிற்றுண்டியும் உண்ணலாம்.

9. ஐயப்பன்மார்களும் அவர்கள் குடும்பத்தினர்களும் துக்க காரியங்களில் கலந்து கொள்ளக் கூடாது. கலந்து கொள்ளுதல் தவிர்க்க முடியாததென்றால் மாலையை கழற்றி விட்டுக் கலந்து கொள்ளலாம். மாலை அணிந்து கழற்ற நேரிட்டால் குறைந்தது 6 மாதம் கழித்துத் தான் மாலை அணிந்து சபரிமலைக்குச் செல்லலாம்.

10. மாலை அணிந்தவர்கள் அனாவசியமான பேச்சைக் குறைக்க வேண்டும். வம்பு, சண்டையில் ஈடுபடாதிருத்தல் வேண்டும். கோபத்தைத் தவிர்த்தல் வேண்டும்.

11. மாலையணிந்த அன்பர்கள் உள்ளத் தூய்மையுடன் சாந்தஸ்வரூபனாக உலகப் பற்றற்று பக்குவம் மிக்கவர்களாக விளங்க வேண்டும். சுருங்கக் கூறின் அவர்கள் ஒவ்வொருவரும் நல்ல நெறியினை பின்பற்றி ஐயப்பனாகவே காட்சி தரவேண்டும்.

12. மனப்பக்குவம் அடையும் வரை கடுமையான விரதம் மிகவும் அவசியம்.

❁❁❁❁❁

## ஸ்ரீ ஐயப்பனின் ஸ்வரூபம்

முடி முதல் பாதம் வரை நேர்நிலையில் நிறுத்தி, இருகால்களையும் முழந்தாளிட்டு உட்கார்ந்து, வலது முழங்காலின் மேல் வலது கையினால் சின்முத்திரையைக் காட்டி, இடது முழங்காலின் மேல் இடது கையினால் ஆனந்த நிலையைக் காட்டி, ப்ரணவ வடிவத்தில் ஞானபீடத்தில் வீற்றிருக்கும் கோலமே ஸ்வாமியின் திருவுருவம்.

****



## ஐயப்பன்மார்களுக்கு வேண்டுகோள்

1. சபரிமலைக்கு இருமுடி தாங்கி பதினெட்டாம் படி ஏறி தரிசனம் செய்ய விரும்புவோர்கள் குறைந்தது ஒரு மாத காலத்திற்காவது மாலை அணிந்து விரதத்தை முறையாகக் கடைப்பிடித்தல் அவசியம்.

2. ஐயப்ப பக்தர்கள் எல்லா வகையிலும் மிகமிக எளிமையாகவும், தூய்மையாகவும் இருத்தலே சிறந்தது.

3. இறைவனிடம் அசையாத நம்பிக்கை வைத்து அவனே முழு சரணாகதி என்று எச்செயலையும் செய்தால் நல்லதே நடக்கும்.

4. ஐயப்ப விரதத்தில் மூட நம்பிக்கைகள் அவசியமில்லாதவை.

5. மாலை அணிந்த ஐயப்பன்மார்கள் புகைபிடித்தல் மற்ற லாகிரி வஸ்துக்கள் உபயோகித்தல் மிகவும் தவறானவை. புலன்களை அடக்கத் தெரியாதவர்கள், அடக்க இயலாதவர்கள் மாலை போடாமலே பதினெட்டாம்படி ஏறாமல் பின் வழியாகச் சென்று இறைவனை தரிசித்தல் உசிதமான செய்கையாகும்.

6. ஐயப்ப பூஜை என்ற பெயரில் ஒலிபெருக்கி வைத்து நள்ளிரவு வரை அடுத்தவர்களுக்கு இடையூறாக இருப்பது விரும்பத்தக்கதல்ல.

7. தங்களுக்கு இது எத்தனையாவது மலை என்று வினவுவதும், தான் இத்தனை தடவை மலைக்கு சென்றிருக்கிறேன் என்று பெருமை அடித்துக் கொள்வதும் வேண்டாமே!

8. கன்னி பூஜை என்ற பெயரில் கடன் வாங்கி ஆடம்பர பூசை செய்வது வேண்டாத செயலாகும்.

9. அன்னதானம் என்பது ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் உணவளிப்பதாகும்.

10. இருமுடி கட்டுதல் மிக புனிதமான வைபவமாகும். இதை வீடியோ, புகைப்படம் எடுப்பது அநாச்சாரமான செய்கைகள் ஆகும்.

11. இருமுடி தாங்குபவர்களுக்கு பூ மாலை அணிவித்து அடுத்த நிமிடமே அந்த பூக்கள் மற்றவர்கள் காலில் பட்டு சீரழிவது விரும்பத்தக்கக செயல் இல்லை. தவிர்க்கலாமே!

12. ஐயப்ப பக்தர்கள் வெளி ஸ்தலங்களுக்கு வழிபட செல்கையில் அங்குள்ள நடைமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் மதித்து நடத்தல் அவசியமானதாகும். உதாரணம் : குருவாயூரப்பன் சன்னதியில் மிக சப்தமாக சரண கோஷம் சொல்லாமல் அமைதியாக வழிபடுதல்.

13. மாலைக்கு மதிப்பளித்து ஒரு மண்டல கால விரத முறைகளை நெறியாகவும், முறையாகவும் கடைப்பிடித்து, தான் என்னும் அகங்காரத்தை விட்டொழித்து ஒரு முகமாக இறைவனைப் பற்றிய சிந்தனையோடு வழிபட்டால் இறைவனின் அருட்காடாட்சம் என்றும் உண்டு.

14. ஐயப்பனிடம் பயப்படத் தேவையில்லை. அவன் அன்பே உருவானவன், கருணை உள்ளம் கொண்டவன். தூய்மையான தன்னலமற்ற பக்தியின் மூலமாக அவனை மிகவும் எளிதில் நெருங்க முடியும்.

✣ ✣ ✣ ✣ ✣





## குருசாமி

1. ஐயப்பனின் அருளாலும் தன்னுடைய நெறியான விரத மகிமையினாலும் பல பக்தர்கள் வாழ்வில் மிக உன்னதமான நிலைக்கு வந்துள்ளனர். பகவானுக்கு அடுத்த படியாக என்றும் அவர்கள் நினைவு கூறுவது அவர்களுக்கு ஐயப்ப பக்தியை அறிமுகப்படுத்தி நல்வழிகாட்டிய குருசாமிகளைத் தான்.

2. குருசாமிகளாக இருப்பவர்கள், தான் எல்லா வகையிலும் மிக சுத்தமாகவும் தூய்மையாகவும் இருந்து மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும்.

3. கன்னி சுவாமிகளுக்கும் மற்ற சீடர்களுக்கும் ஐயப்பன் பெருமையைப் பற்றியும், சபரி மலை யாத்திரையின் உயர்வைப் பற்றியும், விரதத்தை நெறியாக, முறையாக கடைபிடித்தலின் அவசியம் பற்றியும் எடுத்துச் சொல்லி அவர்களை சரியான வழியில் நடத்திச் செல்லுதல் உத்தமம் ஆகும்.

4. எந்த விதமான சுய நலத்திற்கும் உட்படாமல் ஐயப்பனுக்கும் ஐயப்ப பக்தர்களுக்கும் சேவை செய்வது மிகவும் அவசியம் ஆனதும் போற்றக் கூடியதும் ஆகும்.

5. குறைந்தது 10 கன்னி சாமிகளை முறையாக விரதத்தை 41 நாட்கள் கடைப்பிடிக்க வைத்து ஐயப்ப நெறியை புரிய வைத்து எந்த வித பிரதி பலனையும் எதிர்பாராமல் அவர்களை மட்டும் பிரத்யேகமாக சபரி மலைக்கு அழைத்துச் சென்று வருதல், 18 படிகளைக் கடந்த குருசாமிகள் ஒரு நோக்கமாக கொள்ளுதல் மிகவும் பாராட்டத்தக்க சேவையாகும்.

❖ ❖ ❖ ❖ ❖

## சபரிமலை யாத்திரை செல்லும் அன்பர்களின் கவனத்திற்கு

1. சபரி மலைக்கு யாத்திரை செல்லும் ஒவ்வொரு பக்தரும் ஒரு ஐந்து நிமிடமாவது ஒதுக்கி பம்பை நதிக்கரையையோ அல்லது சன்னிதானத்தையோ சுத்தம் செய்வது மிகவும் போற்றத்தக்க செயலாகும்.
2. சபரிமலைப் பயணத்தின் போது ஆடம்பரமான விருந்து உண்ணுதலை தவிர்த்தல் எல்லா வகையிலும் நல்லது.
3. சாப்பிட்ட இலைகளை புனிதமான பம்பை நதியில் எறிந்து அந்த புண்ணிய நதியை அசுத்தப்படுத்துதல் மிகவும் தவறான செயலாகும். மாறாக ஒரு குழி தோண்டி அவைகளை புதைக்கலாமே!
4. பம்பை விளக்கேற்றி வழிபடுதல் மற்றவர்களுக்கு எந்த விதமான இடையூறு இல்லாமல் அமைதியாக ஆடம்பரமின்றி தாம் தங்கும் தாவளத்திலேயே கொண்டாடுதல் உசிதமான செயலாகும்.
5. சன்னிதானத்தில் கற்பூர ஆழி பிரதட்சிணத்தை எந்த விதமான அசம்பாவிதத்திற்கும் உட்படாமல் அடக்கமாக செய்வது எல்லோருக்கும் நல்லது ஆகும்.
6. கண்ணாடி பாட்டில்களையும், உடைந்த தேங்காய் மூடிகளையும் கண்ட இடத்தில் போட்டு மற்ற ஐயப்பன்மார்களின் பாதத்தை புண்ணாக்கும் பாவத்தை செய்ய வேண்டாமே!
7. ஐயப்பன் வழிபாட்டை ஆவேசத்திற்கும், ஆக்ரோஷத்திற்கும், ஆடம்பரத்திற்கும் உள்ளாக்காமல் அமைதியாகவும் சாத்வீகமாகவும் மேற்கொள்ளுவோமே!

❖ ❖ ❖ ❖ ❖



## வழி நடை கோஷங்கள்

| | |
|---|---|
| *சுவாமியே* | *ஐயப்போ* |
| *ஐயப்போ* | *சுவாமியே* |
| *சுவாமி சரணம்* | *ஐயப்ப சரணம்* |
| *ஐயப்ப சரணம்* | *சுவாமி சரணம்* |
| *பகவான் சரணம்* | *பகவதி சரணம்* |
| *பகவதி சரணம்* | *பகவான் சரணம்* |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| தேவி சரணம் | தேவன் சரணம் |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |

குண்டும் குழியும்
கண்ணுக்கு வெளிச்சம்
பாத பலம் தா
தேக பலம் தா
தூக்கிவிடப்பா
ஏத்திவிடப்பா
ஸ்வாமி பாதம்
ஐயப்ப பாதம்
யாரைக் காண
சுவாமியைக் கண்டால்
நெய்யபிஷேகம்
சுவாமிக்கே
கற்பூரஜோதி
ஸ்வாமிக்கே
கற்பூரஜோதியே
காந்தமலை ஜோதியே
வில்லாளி வீரனே
வீரமணி கண்டனே
சுவாமியே
ஐயப்போ

கண்ணுக்கு வெளிச்சம்
குண்டும் குழியும்
தேக பலம் தா
பாத பலம் தா
ஏத்திவிடப்பா
தூக்கி விடப்பா
ஐயப்ப பாதம்
ஸ்வாமி பாதம்
சுவாமியைக் காண
மோட்சம் கிட்டும்
சுவாமிக்கே
நெய்யபிஷேகம்
ஸ்வாமிக்கே
கற்பூரஜோதி
காந்தமலை ஜோதியே
கற்பூர ஜோதியே
வீரமணி கண்டனே
வில்லாளி வீரனே
ஐயப்பா
சுவாமியே



# மணிகண்ட பிரபுவின் மகா புண்ய கதைப் பாடல்

மெட்டு : லவகுசா – ஜெகம் புகழும் புண்ய கதை ராமனின் கதையே
இயற்றியவர் : டாக்டர் சரஸ்வதி இராமநாதன், பள்ளத்தூர்

1. மாநிலமே புகழும் ஐயன் மணிகண்டன் கதையே
உங்கள் மனம் குளிரப் பாடிடுவோம் கேளுங்கள் இதையே!

இகபர சுகமெலாம் அடைந்திடலாமே
இந்தக் கதை கேட்கும் எல்லாருமே
இனித்திடும் நாவெல்லாம் உரைத்திடும் போதிலே
இணையே இல்லாத மாபெரும் அற்புதமே!

2. மகிஷி என்பாள் சுக்கிரனின் உபதேசத்தால் மாதவம் செய்தாள்
நிலம், நீரால், காற்றால், தீயால் மாளாத வரம் பெற்றாள்
அரி அரனும் சேர்ந்து பெற்ற மகன் கையால்
அடைவேன் மரணம் என்றாள் . . .
வரம் பெற்ற மகிஷியும் வானவர் நாடு முதல்
வரையெலாம் கலக்கி நின்றாள் . . .

3. அரக்கியின் அகந்தையை அடக்கவே அமரர்கள்
அரனை அய்யனை அரியை வேண்டி நின்றனரே!

4. மந்தரம் மத்தாக வாசுகியே நாணாக
அந்தமாய் அசுரர் தேவர் கடையும் போது
விந்தையாய் அமுதம் தோன்ற அசுரர் தமக்குள்ளே
சொந்தமாம் எனக்கதென்று சண்டை செய்தனரே!

5. மாலிடம் தேவர்கள் முறைசெய்து வேண்டவே
கோலமார் மோகினியாய் ரூபம் கெண்டார்
மேலொரு அழகிலா மெய்யினைக் கண்ட அசுரர்
மால் கொண்டு அமுதத்தையும் மறந்து நின்றனரே!

6. அசுரரை மயக்க வந்த அழகு மோகினி ரூபம்
பசுபதியும் கண்டு பரவசம் அடையவே
பசுந்துழாய் மார்பன் மேல் பரஞ்சுடர் காதலுடன்
விசும்புளோர் கனி கொள்ள விரைவாகத் தழுவினரே!

7. வைணவ சைவசக்தி வகையுடன் சேர்ந்துமே
கவின் பெறு சகுண ரூபக் குழந்தையின் வடிவம் கொண்டானே!
நம் அரி அர புத்ரன்என வடிவு கொண்டானே

8. ஈண்டியமலர்கள் தூவி இருசுடர், நவகோள்கள் போற்ற
காண்டகு சிரப்பின்மிக்க கலியுக வரதன் வந்தானே!

9. அலைமகளும், மலைமகளும் பாலை யூட்ட
கலைமகளும் கலையூர் மாதும் தாலாட்ட
இலகு கரம் அபய வரதம் எழிலோடு காட்ட
என்றும் தயை காட்டும் விழி மலர்ந்தருளினான்.
ஐயன் விழி மலர்ந்தருளினான்.

10. பார் உளோர் பவப்பிணி போக்க வந்து
பக்தரைத் தன்பால் ஈர்க்க என்றே
மார்கழித் திங்கள் சேரும் மன்னிய சனிவாரத்தில்
பேர்மிகு உத்தரத்தில் பீடுறு விருச்சிகத்தில்
தாரகப் பிரம்மம் தானே தர்மசாஸ்தா என்று வந்தான்.



11. பன்னிரெண்டாண்டு நீயும் பாரிலேமானிட உருவாய் வாழ்ந்து
தென்திசை கேரளத்தில் திவ்ய லீலைகள் செய்வாய்
என்றுமே அரனார் சொல்ல எழில் மிகு பம்பை தீரம்
தன்னிலே குழவியாகி மணிகண்டன் மண்ணில் வந்தான்.

12. ஆண்தகை பந்தளன்தான் அழகிய குழவி தன்னைக்
காண்டலும் மயங்கி நின்று கைகளால் எடுத்தணைத்தான்

13. ஐயனே! தர்ம சாஸ்தா அழகுமிகு
சேயாகி வந்தனன் உன்மகனாய்
'மணிகண்டன்' என்று பேர் சொல்
என, மறையவன் ஒருவன் சொன்னான்.

14. திருமிகு கலைகள் யாவும் தேர்ந்துமே கற்று வந்து
குருகுல வாழ்வில் ஐயன் குவலயம் போற்ற நின்றான்
குருமகன் குருடன் ஊமை என்றந்த நிலையை மாற்றி,
திருவொடு பார்வை பேச்சு திகழவே அருள் செய்தானே!

15. மன்னன் பந்தளன், "என்பின் மணிகண்டன் ஆள்வான்"
என்றே மந்திரிகள் பலரிடமும் மகிழ்ந்துமே சொன்னான்.
தந்திரத்தால் தர்மசாஸ்தா தங்கமேனியில் புண்கள்
வந்து வருந்திடவே ஒருவன் தீமைகள் செய்தான்.
கடலில் பெருங்காற்றில் அலைபட்ட கலம் எனவே
மக்களும் மன்னனும் மதி மயங்கினரே!
சத்ருசம் ஹார ஓமம், சத்யரூபன் பிணி நீங்க
உத்தமர் பலரைக் கொண்டு உயர் பந்தளன் தான் செய்தான்.

16. தான் செய்த சூழ்ச்சி தகர்ந்தது கண்ட அமைச்சன்
தன்னலத்தை அரசி மனத்தில் விதைத்தனனே!
"மன்னனின் மணி முடியோ மணிகண்டனுக்கு என்றால்
உன்மகன் என்றும் அடிமை என்றுரைத்தானே!

17. அரசியும் மனம் மாறி ஐயப்பனை விரட்டிடவே
அழகாய்த் திட்ட மொன்று வகுத்தனளே!
உடைக்குது தலைவலியே என்றவள் ஓலமிட
ஒவ்வாத வைத்தியனுடன் வந்தான் மந்திரியே
புலியின் பால் ஒரு நாழி உடன்தந்தால் நான்தானே
வலியினை விரைவாகப் போக்குவேன் என்றான்
பலிகொள் புலியின் பால் யார் கொணர்வார் என்று வேந்தன்
நலிந்து வருந்தும் போது – "நான் தருவேன்" என்றான் ஐயன்.

18.- மணிகண்டன் நானிருக்க மனக்கவலை எதற்கு? என்றான்
உன்தன் உணவுக்கு ஏற்ற பொருள்களுடன்
ஒரு தேய்காய் எடுத்து செல்க உத்தம மகனே! எனவே
முந்தித் தன் சிரசில் இருமுடி சேர்த்துமே
வந்தான் கங்கையினில் புனித பம்பைக் கரைதனிலே.

19. "தேவரே! அஞ்சேல்! உங்கள் தேவையை நானறிவேன்
பாவியாம் மஹிஷி ஆவி போக்க வந்தவன் நானே! எனப்
பூதக்கணங்கள் சூழ, பூதநாயகன் சென்றான்
காதகி மகிஷி தன்னை மும்முறை சுழற்றி வீசினான்.

20. அழுதையின் கரையில் அவள் அற்ப உடல் வீழ
அமிழ்தாம் ஐயன் கையால் அவள் சாபம் நீங்கியதே!
என்னையும் சக்தியாக ஏற்றருள் தேவா என்றாள்
உன்னை என் தங்கை மஞ்ச மாதா வாய் ஏற்றனன் என்றான்.

21. அந்தரத்தோர் புலிகளாக, அமரேந்தரனும் புலியாக
வந்தனரே: புலிமீது புண்யனும் அமர்ந்து வந்தான்
பந்தளன் அஞ்சி நின்று, பரவியே புகழ்ந்தேத்தி
"என்தன் மகன் இங்கு எளிய மானிடம் இல்லை" என்றான்.



22. இறைவன் என் மகனாக
எளிமையாய் வளர்ந்தானே !
இவனைப் போற்றுதலே
என்குடிக்கு எய்தும்பேறு
இந்நாட்டு எல்லைக்குள்ளே
இவன் கோவில் காண்பேன் என்றான்

23. பதினெட்டுப் படிகள் கட்டி,
பாங்குடன், " பரமனே நின்
துதி பெறு நற் கோலம் தொண்டற்குக் காட்டு " என்றான்
பதிவுறு தவக் கோலம்
பாங்குடன் காட்டி நின்றான்
விதிமுறை கோவில் செய்து
வேதங்கள் போற்றிசைக்க
பம்பையின் நீர் கொணர்ந்து
பதினெட்டுப் படிகள் ஏறி
பிம்பத்தை அபிஷேகித்து
பீதாம்பரம் சார்த்தி
எம்பிரான் தன்னை மிக
எழில் கொள அலங்கரித்தார்
உம்பர்கள் மலர்தூவ
ஓங்கிற்று சரண கோஷம்
(சாமியே சரணம் ஐயப்பா )

" மணிகண்டா வாழ்க ! உன் மணி திகழ் கண்டம் வாழ்க !
அணி கொள் சபரி மலை வாழ்க
அடியவர் கூட்டம் வாழ்க ! "